

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 248 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 06 – ஞாயிற்றுக்கிழமை 19 ஏப்ரல் 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 248 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 06 - Sunday 19 April 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த ‘தொகுதி மறுவரையறை’ உள்ளிட்ட 3 மசோதாக்கள் தோல்வி!

# டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு ! ஜனநாயகம் வென்றது !

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதப் பதிவு!

சென்னை, ஏப்.19 -

**நாடாளுமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த மகளிர் இட ஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை உள்ளிட்ட 3 மசோதாக்களுமே நேற்று முன்தினம் வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தன.**

**இது தொடர்பாக கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், “டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு” என்று பெருமிதத்துடன் பதிவிட்டுள்ளார்.**

**இன்னொரு சமூக வலைதளப்பதிவில் “தென்னிந்தியா ஒன்றிணைந்தது; குரல் கேட்கப்பட்டது. ஜனநாயகம் வென்றது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

### டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு! டெல்லியின் ஆணவத்தையும் - ஆணவத்துக்குத் துணை போகும் அடிமைகளையும் ஏப்ரல் 23 அன்று ஒருசேர வீழ்த்துவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தொகுதி மறுவரையறை மசோதா!

இதையடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இன்னொரு பதிவு வருமாறு:-

**தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராகத் தமிழ்நாடு போராடியது;**


**தமிழ்நாடு வென்றது!**

இந்திய ஜனநாயகத்தில் யாருக்குப் பிரதிநிதித்துவம் இருக்கும், யாருடைய குரலுக்கு இடமிருக்கும் என்பதுதான் தொகுதி மறுவரையறை. அது ஒன்றியத்தைப் பலப்படுத்துவதாக இருக்க வேண்டுமே ஒழிய, பலவீனப்படுத்துவதாக இருக்கக் கூடாது!

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய பாதையில், தமிழ்நாடு எப்போது நீதி - கண்ணியம் - கூட்டாட்சி ஆகியவற்றுக்காகவே நின்றுள்ளது.

தென்னிந்தியா ஒன்றிணைந்தது; நமது குரல் கேட்கப்பட்டது; ஜனநாயகம் வென்றது!

நாம் தொகுதி மறுவரையறையை எதிர்க்கவில்லை. நன்கு சிந்தித்து, அனைவரையும் கலந்தாலோசித்து, அனைவரும் ஏற்றுக் கொண்ட, நியாயமான நடைமுறையையே நாம் வலியுறுத்தினோம்.




தமிழ்நாட்டின் உரிமைகளுக்கும், நமது பண்பாடு மற்றும் அடையாளத்துக்கும், இந்தியக் கூட்டாட்சிக்கும் ஊறு வரும்போது, ஒற்றுமையுடன் நிற்பதுதான் நமது உறுதி!

இந்த அநீதியை எதிர்த்து ஓரணியில் நின்ற அனைத்துத் தோழமைக் கட்சிகளுக்கும் என்னுடைய நன்றி!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




**மக்களவையில் ‘தொகுதி மறுவரையறை மசோதா’ தோல்வி அடைந்ததையடுத்து தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திண்டுக்கல்லில் வாணவேடிக்கை வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய காட்சி!**

### மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா!

இதைத் தொடர்ந்து மகளிர் இடஒதுக்கீடு மசோதா தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு : -

**மகளிர் இடஒதுக்கீடு மசோதாவைப் பொறுத்தவரையில், என்ன நடந்தது என்பதைக் கூர்ந்து கவனியுங்கள்.**

“இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீட்டுச் சட்டம், 2023”-ஐ மக்கள்தொகைக் கணக்கெடுப்பும், தொகுதி மறுவரையறையுமின்றி நிறைவேற்ற முடியாது என்பதை உறுதி செய்யவே, மாநிலங்களில் தேர்தல் நடைபெறும் நேரத்தில் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டினார்கள்.

மகளிர் இடஒதுக்கீடு இப்போதே உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் நமது நிலைப்பாடு. உள்ளாட்சிகளில் மகளிர் இடஒதுக்கீட்டை முன்னோடியாகச் செயல்படுத்தியது தமிழ்நாடுதான்.

எங்களுடைய கவலை என்பது, தென் மாநிலங்களைப் பாதிக்கும் தொகுதி மறுவரையறை மசோதா இத்துடன் உள்நோக்கத்துடன் இணைக்கப்பட்டதுதான். மறுவரையறை என்பது தென்மாநிலங்கள் பாதிப்படையாத வகையில் கவனத்தோடு செய்யப்பட வேண்டியது. அதனால்தான், அனைவரோடும் கலந்து பேசி, கருத்தொற்றுமையுடன் இதனைச் செய்யக் கோரினோம்.

குறைந்தபட்சம், தொகுதி மறுவரையறை மசோதாவையும் மகளிர் இடஒதுக்கீட்டையும் பிரித்திருக்கலாம். ஆனால், பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு அதனைச் செய்யவில்லை.

இதேநேரத்தில், அவர்கள் மாநிலங்களுடன் தொகுதி மறுவரையறை குறித்து ஆலோசித்திருக்கலாம். ஆனால், அதனையும் செய்யவில்லை.

நாம் தெரிவித்த கவலைகளுக்குத் தீர்வு கண்டிருக்கலாம். அதனையும் செய்யவில்லை.

**இது நீதியல்ல;**

**இது உண்மையான நோக்கமல்ல;**

**இது வெறும் காட்சிப்பிழை!**

**இதனைத் தமிழ்நாட்டுப் பெண்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.**

இந்தியப் பெண்கள் வாக்கு வங்கி அல்ல. அவர்களும் பா.ஜ.க. நடத்தும் நாடகங்களைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றனர்.

உண்மை எளிமையானது: பா.ஜ.க. நினைத்திருந்தால் பெண்களுக்கு இடஒதுக்கீட்டை வழங்கியிருக்கலாம். ஆனால், அவர்கள் வழங்கக் கூடாது என முடிவெடுத்துவிட்டனர்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## மக்களவையில் ‘தொகுதி மறுவரையறை’ மசோதா தோல்வி!

*புதுடெல்லி, ஏப்.19 -*

*தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்பை மீறி மக்களவையில் கொண்டு வரப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்தது. 3இல் 2 பங்கு பெரும்பான்மை இல்லாததால் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த மசோதா தோல்வியடைந்தது.*



*ஒன்றிய பா.ஜ.க. அரசு தொகுதி மறுவரையறையை கொண்டு வந்து எப்படியும் நிறைவேற்றி தென் மாநிலங்களுக்கு வஞ்சகம் செய்ய நினைத்ததை கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது செயலால் தமிழ்நாடு முழுவதும் கருப்புக்கொடி ஏற்றப்படும் என்று அறிவித்தது இந்தியா முழுவதும் எதிரொலித்தது.*

### கருப்பு கொடி ஏற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

*தென் மாநிலங்களை பெரிதும் பாதிக்கும் இச்சட்டத்தினை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் அதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத்தினர் அனைவரும் இச்சட்ட மசோதாவிற்கு எதிராக தத்தம் இல்லங்களில் கருப்புக் கொடி ஏற்ற வேண்டும் என்று உத்தரவிட்டார்.*

*கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல்லில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட போது, இச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாமக்கல்லில் கருப்புக் கொடி ஏற்றியதுடன், சட்ட மசோதாவிற்கு தீ வைத்தார். கருப்பு சட்டையும் அணிந்து தொகுதி மறுவரையறைக்கு பலத்த எதிர்ப்பை பதிவு செய்தார்.*

*இந்நிலையில் நாடாளுமன்ற மக்களவையில் 131வது அரசியலமைப்புத் திருத்தம் தொகுதி மறுவரையறை செய்யும் வகையிலான மகளிர் இட ஒதுக்கிடு மசோதா 16.4.2026 அன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் மீதான விவாதம் 16.4.2026 அன்று நள்ளிரவு வரையில் நடைபெற்றது.*

*தி.மு.க. சார்பில், மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் மக்களவை கழகக் கொறடா ஆ.ராசா ஆகியோர் இவ்விவாதத்தில் பங்கேற்று பேசினர்.*

*மக்களவையில் இச்சட்டத்தின் மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, இந்த மசோதா நிறைவேற்றப்படாது என்று தெரிந்தும் தாக்கல் செய்திருக்கின்றனர். தென்னிந்தியாவை பாதிக்கப்பட விட மாட்டோம் என்றும் கூறினார்.*

*இந்த மசோதா மீது எதிர்க் கட்சி எம்.பி.க்கள் கடும் கண்டனம் தெரிவித்து பேசினர்.*

*பிரதமர் மோடி இந்த மசோதாவை நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டார்.*

*இதனையடுத்து மசோதா மீது அவையில் விவாதம் நடத்தப்பட்ட பிறகு வாக்கெடுப்பு நடைபெற்றது.*

*இதில், மொத்தம் 528 எம்.பி.க்கள் வாக்களித்தனர். மசோதாவுக்கு ஆதரவாக 298 பேரும், மசோதாவை எதிர்த்து 230 பேரும் வாக்களித்தனர். மசோதாவை நிறைவேற்ற 3இல் 2 பங்கு பெரும்பான்மை வேண்டும் என்ற விதிப்படி, 352 வாக்குகள் தேவைப்படும் நிலையில், 298 வாக்குகள் மட்டுமே கிடைத்ததால், பெரும்பான்மை இன்றி, ஒன்றிய அரசு கொண்டு வந்த தொகுதி மறுவரையறை மசோதா மக்களவையில் தோல்வியடைந்தது என்று மக்களவை சபாநாயகர் ஓம். பிர்லா அறிவித்தார்.*